AUGUST 08, 2020
SATURDAY
VOL: 006/068
RS. 10.00
LATE CITY ★

Find us on facebook/tamilmirror
Follow us on tamilmirror
epaper/tamilmirror.lk
www.tamilmirror.lk

# தமிழ் Mirror

தாமரை மொட்டுவின்

## தேசியப் பட்டியலில் ராகவனுக்கு இடம்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தனக்குக் கிடைத்த 17 தேசிய பட்டியலின் பெயர் விவரங்களையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளது. அந்தப் பட்டியலில், சிறுபான்மையினர் சார்பில், வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன், சட்டத்தரணி அலி சப்ரி, முன்னாள் எம்.பி. மொஹமட் முஸம்மில், மொஹமட் பலீல் மர்ஜான் ஆகியோருடைய பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## களனியில் ஞாயிறன்று புதிய பிரதமர் பதவியேற்பு

புதிய அரசாங்கத்தின் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ, ஞாயிற்றுக்கிழமை (09) பதவியேற்றுக்கொள்வார்.

இந்த வைபவம், களனி ரஜமஹா விகாரையில், இடம்பெறும். அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளனவென அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதேவேளை, புதிய அமைச்சரவை, நாளை செவ்வாய்க்கிழமை (11) நியமிக்கப்படும்.



## அரசாங்கம் புதுப்பிக்கும்; அமெரிக்கா நம்பிக்கை

“அரசாங்கத்துடனும் புதிய நாடாளுமன்றத்துடனும் இணைந்துப் பணியாற்ற நாம் எதிர்பார்க்கிறோம்” எனத் தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம், நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பதற்குமான தமது உறுதிப்பாடுகளை புதிய அரசாங்கம் புதுப்பிக்குமென தாம் நம்புவதாகவும் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ‘கைகோர்த்து பயணிக்க தயார்’

ஏ.எம்.கீத், அ.அச்சுதன், கதிரவன்

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கத்துடன் சேர்ந்து பயணிப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயாராகவே இருக்கிறதெனத் தெரிவித்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், அது தொடர்பில் இரண்டொரு நாள்களில் கூடி ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றார்.

தொடர்ச்சி P2



## 8 பெண்கள் தெரிவாகினர்

எட்டாவது நாடாளுமன்றத்தில், பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 12 பேர் பிரதிநிதித்துவப்படுத்தினர் என்றாலும் இம்முறை, எட்டுப் பெண்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2


## ரணிலின் சாதனையை முறியடித்தார் மஹிந்த



முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் படைக்கப்பட்ட சாதனை, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால், இம்முறை தேர்தலில் முறியடிக்கப்பட்டுள்ளது.

நிறைவடைந்த நாடாளுமன்ற தேர்தலில், விருப்பு வாக்குகள் விவரத்தின் பிரகாரம், குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகக் கூடுதலான 527,364 விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டார்.

தொடர்ச்சி P2



## ‘முன்னணியின் வெற்றி குழப்பத்தை உருவாக்கும்’

அரசியல் கட்சிகளையும் மிஞ்சுமளவுக்கு அரசியல் முன்னணிகள் நாட்டில் உருவாகி வலுவடைந்துள்ளனவென தெரிவிக்கும் ஐக்கிய தேசிய கட்சி, அதனால் குழப்பகரமானதோர் அரசியல் நிலைமை உருவாக்கப்போகின்றதென ஆரூடம் கூறியுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக நடத்திய தேர்தல் ஆணைக்குழுவுக்கு தனது அறிக்கையின் ஊடாக பாராட்டுகளை தெரிவித்திருக்கும் ஐக்கிய தேசிய கட்சி, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாகவே நீதியானதும் அமைதியானதுமான தேர்தலொன்றை நடத்த முடிந்தது.

தொடர்ச்சி P2

ஐக்கிய மக்கள் சக்தியில்

## தேசியப் பட்டியலில் இம்தியாஸுக்கு இடம்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, முன்னாள் அமைச்சர்களான ரஞ்சித் மத்துமபண்டார, ஹரின் பெர்ணான்டோ, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், திஸ்ஸ அத்தநாயக்க, எரான் விக்கிரமரத்ன, மயந்த திஸாநாயக்க, தயானி கமகே ஆகியோரே, இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதில், தமிழர்கள் எவரும் உள்வாங்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சர்களுக்கு இம்முறை கூடுதல் அதிகாரம்

**புது முகங்களுக்கு வாய்ப்புகள் பல கதவைத் தட்டி உள்ளன**

**அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றோர், அமைச்சரவைக்குள்**




புதிய அரசாங்கத்தின் கீழ் தெரிவுசெய்யப்படவுள்ள அமைச்சரவை, வழமையை விடவும் மாறுபட்டதாகவே இருக்குமென்றும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் புதிய நடைமுறையொன்றை இம்முறை பின்பற்றுவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை, ஒகஸ்ட் 10ஆம் திகதியன்று கண்டியில் சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளது.

தொடர்ச்சி P2

## பிரபலங்கள் அறுவர் வடக்கில் தோல்வி

வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து, கடந்த முறை நடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் எம்.பிகள் அறுவர் இம்முறைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

தொடர்ச்சி P2



## கூட்டணிக்கு ஆறு; காங்கிரஸுக்கு இரண்டு

பொதுத் தேர்தலில், ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ் போட்டியிட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஆறு ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. அதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நுவரெலியா மாவட்டத்தில் மட்டும் இரண்டு ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ச்சி P2



## ‘உண்மையான வெற்றிக்கு சவால்களே உந்தும்’

உண்மையான வெற்றி சவால்களிலிருந்து தோற்றம் பெறுகிறதெனத் தெரிவித்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இந்த வெற்றியை முழு நாட்டினதும் வெற்றியாக மாற்றுவதே எங்களது இலக்காகும் என்றார். “இது மாபெரும் வெற்றி, நாட்டுக்குக் கிடைத்த வெற்றியென நான் சொல்ல வேண்டும். கொவிட் - 19 தொற்றுநோயால் உலகம் முழுவதும் செயலற்ற நிலையில் இருக்கும் நேரத்தில் இந்தத் தேர்தலை நடத்த தீர்மானித்தோம். இந்த நாட்டில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 70 சதவீதத்துக்கும் அதிகமானோர் வாக்களிப்பு நிலையங்களுக்கு வந்து வாக்களித்தனர்” என்றார்.

தொடர்ச்சி P2

## ஹட்டன் - டிக்கோயா நகரசபைக்குள் போராட்டம்

ஹட்டன் - டிக்கோயா சபைக்குள் அமர்ந்தவாறு நபர் ஒருவர், நேற்று (07) போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். நகரசபையின் பிரதம எழுதுவினைஞர், நகரசபையில் பணியாற்றும் முகாமைத்துவ உதவியாளரான தனோஜா என்கிற கர்ப்பிணி பெண்ணை கடுமையாகத் திட்டி, வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அந்தக் கர்ப்பிணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## தேசியப் பட்டியலில் ராகவனுக்கு இடம்

அத்தோடு, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான செயலாளர் சாகர காரியவசம், முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க, ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர் மஞ்சுளா திஸாநாயக்க, சிரேஷ்ட பேராசிரியர் ரஞ்சித் பண்டார, பேராசிரியர் ஷரித ஹேரத், பொறியியலாளர் யதாமினி குணவர்தன, சமூக செயற்பாட்டாளர் கெவிந்து குமாரதுங்க, பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண, முன்னாள் எம்.பியான டிரான் அலஸ், வைத்தியர் சீதா அரம்பேபொல, நடிகர் ஜயந்த கெடகொட ஆகியோரும் இந்த பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

## ‘கைகோர்த்து பயணிக்க தயார்’

பொதுத் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில், விசேட பூஜை வழிபாடுகள் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்று (07) நடைபெற்றது.

வழிபாடுகளைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை இடம்பெற்ற தேர்தலை ஒரு ஜனநாயக தேர்தலாக நான் கருதவில்லையெனத் தெரிவித்த அவர், மக்களுக்கு பணம் வழங்கி நன்கொடை கொடுத்து மதுபானம் வழங்கி ஆளும் கட்சியினர் ஆசனங்களைப் பெற்றுகொண்டுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டினார்.

“சிறிய சிறிய, தமிழ் கட்சிகள் போட்டியிட்டு, தமிழ் வாக்குகளைப் பிரித்துள்ளனர். 20 ஆசனங்கள் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட்டமைப்புக்கு ஒன்பது ஆசனங்களே இதனால் கிடைத்துள்ளது. இதற்காக

**“ எமது மக்கள் தமிழரசுக் கட்சியின் மீது வைத்துள்ள விசுவாசம் காரணமாக நாங்கள் இந்த வெற்றியை பெற்றுள்ளோம். மக்களது அபிவிருத்திப் பணிகளில் நாங்கள் கூடுதல் கவனமெடுப்போம்**

உழைத்த அனைவருக்கும் நன்றி” என்றார்.

“மேலும், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த நீதியும் மற்றும் கௌரவமான பிரஜையாக வாழ தீர்வு வழங்கப்பட வேண்டும். அதில் நாம் உறுதியாக உள்ளோம். ஆனால், ஆட்சி அமைக்கும் அரசாங்கத்தின் நிலைபாட்டைக் கொண்டு எமது இலட்சியத்தை அடைவோம்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இருப்பினும் எமது மக்கள் தமிழரசுக் கட்சியின் மீது வைத்துள்ள விசுவாசம் காரணமாக நாங்கள் இந்த வெற்றியை பெற்றுள்ளோம். தொடர்ந்து வருகின்ற காலங்களில் மக்களது அபிவிருத்திப் பணிகளில் நாங்கள் கூடுதலான கவனம் செலுத்துவோம்” என்றார்.

## 8 பெண்கள் தெரிவு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில், இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து பவித்ரா வன்னியராச்சி, முதித சொய்சா ஆகியோரும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து தலதா அத்துகோரலவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கேகாலை மாவட்டத்தில் ராஜிகா விக்ரமசிங்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கீழ் தெரிவு செய்யப்படுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் இருந்து சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, கோகிலா குணவர்தன ஆகியோர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில், தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காலி மாவட்டத்திலிருந்து லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில், கீதா குமாரசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் கீழ், மாத்தளையில் போட்டியிட்ட ரோஹிணி கவிரத்ன ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இருப்பினும் முன்னாள் மகளிர் விவகார அமைச்சர் சந்திராணி பண்டார, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹிருணிகா பிரேமச்சந்திர, துசிதா விஜேமான்ன, விஜயகலா மகேஸ்வரன், அனோமா கமகே, ஸ்ரீயானி விஜேவிக்ரம மற்றும் சுமேதா ஜீ ஜயசேன ஆகியோர் இந்த தேர்தலில் வெற்றிபெறவில்லை. நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் 2015இல் 5.3% ஆக இருந்தது,

## அரசாங்கம் புதுபிக்கும் அமெரிக்க நம்பிக்கை

இலங்கை மக்கள் அடிப்படை ஜனநாயக உரிமையொன்றை பயன்படுத்தி, தங்களது அடுத்த நாடாளுமன்றத்தை தெரிவுசெய்வதற்கு ஒகஸ்ட் 5ஆம் திகதியன்று வாக்களிக்கச் சென்றனர்.

கொவிட்-19 தொற்றுப் பரவலினால் முகங்கொடுக்க நேர்ந்த சாவல்களுக்கு மத்தியிலும் கூட அமைதியான மற்றும் ஒழுங்கான முறையில் தேர்தலை நடத்தியமை தொடர்பில் இலங்கையை அமெரிக்கா பாராட்டியுள்ளது.

புதிய நாடாளுமன்றம் கூடுகின்ற நிலையில், அனைவரையும் உள்வாங்கிய

**“ நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதற்குமான தமது உறுதிப்பாடுகளை புதிய அரசாங்கம் புதுபிக்கும் என்று நாம் நம்புகிறோம்**

பொருளாதார மீட்சியை கட்டியெழுப்புவதற்கும் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கும் மற்றும் நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதற்குமான தமது உறுதிப்பாடுகளை புதிய அரசாங்கம் புதுபிக்கும் என்று நாம் நம்புகிறோமென தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரணிலின் சாதனையை முறியடித்தார் மஹிந்த

இதற்கு முன்னர் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவே, ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று, சாதனைப் படைத்திருந்தார். 2015 பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க, 500,566 வாக்குகளைப் பெற்று சாதனைப்படைத்திருந்தார்.





## சந்திப்பு...

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி லெப்டினன் கேணல் ரைவிஸ் கொஸ், பாதுகாப்பு பிரதானியும் இராணுவ தளபதியும் கொவிட்–19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மய்யத்தின் தலைவருமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவை, ஜயவர்தனபுர இராணுவ தலைமையகத்தில், நேற்றுமுன்தினம் (07) சந்தித்து இருநாடுகளிடையே மேம்படுத்த வேண்டி முக்கியத்துவம் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

## ‘முன்னணியின் வெற்றி குழப்பத்தை உருவாகும்’

தேர்தல் காலத்தில் கொவிட் - 19 வைரஸ் பரவல் தாக்கம் செலுத்தியதோடு, அதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்பட்டதென்றும் அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வேலைத்திட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி மாத்திமே முன்னிலைப்படுத்தி இருந்ததெனவும் தெரிவித்துள்ளது.

நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தம்முடன் இருந்தவர்களுக்கு நன்றி கூர்ந்துள்ள அக்கட்சி, மக்கள் செல்வாக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு பெருமளவில் கிடைத்துள்ள போதும், நீண்ட காலமாக ஆட்சி அதிகாரத்திலிருந்து நாட்டு மக்களுக்கு பல சேவைகளை ஆற்றிய ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

கட்சிக்கு உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் வந்த சவால்களுக்கும் கட்சி முகங்கொடுத்ததென்றும், தோல்விக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதாகவும் அறிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில், கொள்கையை மய்யப்படுத்திய அரசியல் கட்சிகளை மிஞ்சி செல்லும் அளவுக்கு அரசியல் முன்னணிகள் வலுவடைந்துள்ளன. அதனால், நாட்டில் எதிர்வரும் நாள்களில் குழப்பங்களுடன் கூடிய அரசியல் நிலைவரம் ஒன்று உருவாகலாம் எனவும் ஐ.தே.கவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தேர்தல் முடிவுகளை மக்கள் அமைதியான முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு, முன்னைய காலங்களில் போன்றே ஐக்கிய தேசிய கட்சி புத்துயிர் பெற்று வலுவான நிலைக்கு வருமென தெரிவித்துள்ளது.

## இராஜாங்க அமைச்சர்களுக்கு இம்முறை கூடுதல் அதிகாரம்

இதில், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இம்முறைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய புது முகங்களுக்கு வாய்ப்புகள் பல கதவைத் தட்டி உள்ளனவென தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதனடிப்படையில், மாவட்ட ரீதியில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர்கள், அமைச்சரவைக்குள் நேரடியாக உள்வாங்கப்படுவார்கள் எனவும் புதிய முகங்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள், வழங்கப்படுமெனவும் அறியமுடிகிறது. அந்த இராஜாங்க அமைச்சுப் பதவிகள், மாவட்டத்துக்கு ஒன்றென பிரித்து கொடுக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் கொழும்பிலிருந்து கொள்கைகளை வகுப்பவர்களாக

**“ ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டவர்கள் பெருமெடுப்பில் வெற்றியீட்டியுள்ளமையால், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர் பதவிகளைப் பகிர்ந்தளிக்கும் போது, மிகக் கவனமாக சில விடயங்களை அரசாங்கம் கையாள உள்ளன**

இருப்பர் என்றும், அந்த கொள்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை, முன்னெடுக்கும் அதிகாரமிக்கவர்களாக, இராஜாங்க அமைச்சர்கள் இருப்பரென அறிய முடிகின்றது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டவர்கள் பெருமெடுப்பில் வெற்றியீட்டியுள்ளமையால், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர் பதவிகளைப் பகிர்ந்தளிக்கும் போது, மிகக் கவனமாக சில விடயங்களை அரசாங்கம் கையாள உள்ளதென்றும் அறியமுடிகின்றது.

## பிரபலங்கள் அறுவர் வடக்கில் தோல்வி

இதற்கமைய, வன்னி மாவட்டத்தின் இலங்கை தமிழரசுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி பின்னர், தமிழ் மக்கள் தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்ட சிவசக்தி ஆனந்தன் 8,789 வாக்குகளை மாத்திரமே பெற்று தோல்வியடைந்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் 6,522 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய சிவப்பிரகாசம் சிவமோகன் 10,581 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்துள்ளார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட, சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா 11,710 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்துள்ளார்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா 20,358 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்துள்ளார்.

அத்துடன் இலங்கை தமிழரசு கட்சியின் மற்றுமொரு வேட்பாளரான, ஈ. சரவணபவன் 20, 392 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘உண்மையான வெற்றிக்கு சவால்களே உந்தும்’

நிலைமை எவ்வளவு கடினமாக இருந்தாலும் ஜனநாயக முறையில் ஜனநாயகத்துக்காக, பணியாற்ற மக்கள் முன்வந்திருப்பது ஒரு நாடாக நாம் மகிழ்ச்சியடைய வேண்டிய விடயமாகும் எனத் தெரிவித்த அவர், இதுபோன்ற ஒரு ஜனநாயக தீர்மானத்தை மேற்கொண்டு அதனை ஒரு தொற்றுநோய் சூழ்நிலையில் செயல்படுத்த முன்வந்த ஒரு சில நாடுகள் மட்டுமே உலகில் உள்ளன.

“சவால்களின் மூலம் தான் உண்மையான வெற்றி பிறக்கிறது. போரை வெல்வது, கொவிட் -19 தொற்றுநோயை வென்றது மற்றும் இது போன்ற மிக வெற்றிகரமான தேர்தலை நடத்துவது நம் நாட்டின் பலத்தையும் மக்களின் பலத்தையும் உலகுக்குக் காண்பிக்கும்” என்றார்.

“ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தை இந்நாட்டில் செயற்படுத்துவதற்கு முடியும் என்பதை உலகுக்கு நிரூபிக்கிறது. இந்த வெற்றியை முழு நாட்டிற்குமான வெற்றியாக மாற்ற நாங்கள் உறுதியாக இருக்கிறோம்” என்றார்.

## ஹட்டன் - டிக்கோயா நகரசபைக்குள் போராட்டம்

பிரதம எழுதுவினைஞரின் செயற்பாட்டால், தனது மருமகளின் வயிற்றிலிருந்து கரு கலைந்துவிட்டதாக தெரிவித்தே ஹட்டன் டிக்கோயா நகரசபைக்குள் அமர்ந்து அந்த நபர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதேவேளை ஹட்டன் - டிக்கோயா நகரசபையின் பிரதம எழுதுவினைஞரான பெண்ணொருவர் அங்கிருக்கும் ஊழியர்களிடம் கடுமையாக நடந்துக்கொள்வதாகவும் ஊழியர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.



## கூட்டணிக்கு ஆறு; காங்கிரஸுக்கு இரண்டு

இதனூடாக, கொழும்பு, நுவரெலியா, கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில், நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட்ட பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், மயில்வாகனம் உதயகுமார் ஆகிய மூவரும் வெற்றிபெற்றுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் அ.அரவிந்தகுமாரும் கண்டி மாவட்டத்தில் வேலுகுமாரும் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிட்ட ஜவரில் ஜீவன் தொண்டமானும் மருதபாண்டி ராமேஸ்வரனும் அதிகபடியான வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர். மேலும், பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நேரடி வேட்பாளரான வடிவேல் சுரேஷ், வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று ஜீவன் தொண்டமான் முன்னிலை வகிக்கிறார். அவர் 109,155 வாக்குகளை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘வெற்றியை தந்த அனைவருக்கும் வாழ்த்துகள்’



2020 பொதுத் தேர்தல் முடிவுகள் அனைத்தும் வெளிவந்துள்ள நிலையில், அதிகூடிய வாக்குகளைப் பெற்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிபெற்றுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவுக்கு வெற்றியை வழங்கிய மக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து, டுவிட்டரில் பதிவொன்றை இட்டுள்ளார்.

தமிழில் இட்டுள்ள இந்தப் பதிவில், “கடந்த ஜனாதிபதித் தேர்தலில், என்னால் முன்வைக்கப்பட்ட ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கையை, மீண்டும் ஒருமுறை மக்கள் சக்தியின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பொதுத் தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கு மாபெரும் வெற்றியைத் தந்த உங்கள் அனைவருக்கும், எனது மனமார்ந்த வாழ்த்துகள்” எனத் தெரிவித்துள்ளார்.

மூன்றிலிரண்டைப் பயன்படுத்தி

# ‘புதிய அரசமைப்பை உருவாக்குவோம்’



ஐக்கிய தேசிய கட்சியை, மக்கள் முழுமையாகப் புறக்கணித்துள்ளனரெனத் தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, புதிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி இல்லை எனவும் விமர்சனங்களுக்கு முகங்கொடுக்காத புதிய அரச நிர்வாகத்தை மேற்கொள்ள உள்ளதாகவும் அறிவித்தது.

மூன்றில் இரண்டைப் பயன்படுத்தி, புதிய அரசமைப்பை உருவாக்கவுள்ளதாகவும், அக்கட்சி தெரிவித்தது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில், நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில், புதிய அரசாங்கம் விசேட கவனம் செலுத்துமெனவும் 22 தேர்தல் தொகுதிகளில், 19 தேர்தல் தொகுதிகளை, மொட்டு கைப்பற்றியுள்ளது எனவும் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு ஓர் ஆசனம்கூட கிடைக்கவில்லை என்றும் மக்கள் அந்தக் கட்சியைப் புறக்கணித்தமையே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்த அவர், கிடைக்கப் பெற்றுள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்டு, முதலில் புதிய அரசமைப்பை உருவாக்கவுள்ளதாகவும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள், பிணைமுறி மோசடிகள் தொடர்பிலும். புதிய அரசாங்கம் உரிய கவனம் செலுத்துமெனவும் அவர் கூறினார்.

# குருநாகல் மேயர் உள்ளிட்ட ஐவருக்குப் பிடியாணை



புனனேகபாகு மன்னனின் இராஜசபை மண்டபமெனக் கருதப்படும் இடத்தின் ஒரு பகுதியை இடித்துடைத்த விவகாரம் தொடர்பாக, குருநாகல் நகர மேயர் உள்ளிட்ட ஐவருக்கு எதிராக, குருநாகல் நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

சட்ட மா அதிபரின் ஆலோசனைக்கமைய, பதில் பொலிஸ் மா அதிபரால் மேற்படி பிடியாணைக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென, சட்ட மா அதிபரின் தொடர்பாடல் அதிகாரி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

# ‘ஜனநாயகத்தை கட்டியெழுப்ப தேர்தல் வெற்றி பயன்பட்டும்’



அனைத்து மக்களையும் உள்ளடக்கிய உண்மையான ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்காக, நடைபெற்ற பொதுத் தேர்தல் வெற்றியை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று, முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவொன்றில் வலியுறுத்தியுள்ளார்.

“ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, பெரும் வெற்றியைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. எனினும், எந்தவொரு கட்சியும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டுப் பெரும்பான்மையைப் பெறுமாக இருந்தால், அது குறித்த கட்சிக்கு மட்டும் மீறிய அதிகாரங்களை வழங்குவதாக அமையும் என்று பல்வேறு அரசியல் அவதானிகள் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், பொதுத் தேர்தல் வெற்றியைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.

“இலங்கை தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் தீமைகளின் மூலவேரை ஆராய்ந்துப் பார்த்தால், அவற்றைக் கடந்த 1956, 1970, 1977 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில், மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்ட அரசாங்கங்களுடன் தொடர்புபடுத்தக் கூடியதாக இருக்கின்றது. “எனவே, எமது கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து மக்களையும் உண்மையானதொரு ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதற்காக, இந்தப் பொதுத் தேர்தல் வெற்றியை ஜனாதிபதி பயன்படுத்திக்கொள்ள வேண்டும்” என்று, மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

அங்கொட லொக்கா;

# உருவத்தை மாற்ற மூக்கு அறுவை சிகிச்சை



அங்கொட லொக்கா கொலை வழக்கில், தனிப் படைகள் அமைத்து, மதுரை, ஈரோடு, கோவையில் விசாரணை நடத்தப்பட்டுவரும் நிலையில், இந்திய சிபிசிஐ அமைப்பு, இந்திய உளவுத்துறை அமைப்பான “ரோ” அதிகாரிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

கோவையில் உயிரிழந்தது அங்கொட லொக்கா என்பதை உறுதி செய்வதற்காக டி.என்.ஏ. பரிசோதனை செய்யப்பட உள்ளதுடன், அவருடைய உடலிலிருந்து எடுக்கப்பட்ட உறுப்புகள் சென்னை தடயவியல் ஆய்வகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உடலிலிருந்து எடுக்கப்பட்ட இதயமும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு, இந்த வழக்கில் கைதான சிவகாமசுந்தரியின் 7 வங்கி கணக்குகளுக்கு ஒரு கோடி ரூபாய் வரையில் பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளதெனவும் கூறப்படுகிறது.

இதற்கிடையே, சிபிசிஐடி நடத்திய விசாரணையில் கோவை தனியார் மருத்துவமனையில் அவர் மூக்கு அறுவை சிகிச்சை செய்து கொண்டு இருப்பது தெரியவந்துள்ளதோடு, கடந்த ஜனவரி மாதம் பாலாஜி நேர்சிங் ஹோம் என்ற மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

சினிமாவில் நடிக்க இருப்பதாக கூறி மூக்கை பெரிது படுத்தும் அறுவை சிகிச்சை செய்து இருப்பது சிபிசிஐடி விசாரணையில் தெரியவந்துள்ளதோடு, மூக்கை அறுவை சிகிச்சை செய்து மாற்றி தனது தோற்றத்தை மாற்றி முயற்சித்துள்ளமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# ‘வாக்குறுதியை நிறைவேற்றுவதே வெற்றிக் கொண்டாட்டமாகும்’



பிரிவினைவாதமற்ற அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்பு, முதற்றடவையாகக் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, கிடைத்துள்ள வெற்றியைக் கொண்டாடக் கூடிய சிறந்த வழி, பெற்றுக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே ஆகுமெனத் தெரிவித்துள்ளார்.

தங்காலை- கார்ல்டன் இல்லத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்துரைத்துள்ள அவர், “நாம் மக்கள் மீது நம்பிக்கை வைத்தோம். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில், 7 பேரில் 6 பேர் வெற்றிப்பெற்றுள்ளோம். எனது மாவட்டத்தில், மீண்டுமொரு தடவை, மக்கள் என்மீது நம்பிக்கை வைத்து, அதிக விருப்பு வாக்குகளை வழங்கியுள்ளனர். எதிர்வரும் காலத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கொள்கைகளைச் செற்படுத்தி, நாட்டைக் கட்டியெழுப்புவது அவசியம்” என்றார்.

“அரசியலில், வெற்றி - தோல்வி இரண்டையும் ஏற்றுக்கொள்ளப் பழக வேண்டும். ஏனைய கட்சியினர், மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்களும் இதற்குப் பழகிக்கொள்ள வேண்டும். அன்று, மஹிந்த தோல்வியுற்று கார்ல்டன் இல்லத்துக்கு வரும்போது, அவர் மீண்டும் அரசியலுக்கு வருவாரென இன்று தோற்றவர்கள் நினைக்கவில்லை. ஆனால், இந்த மக்கள், மஹிந்தவுடன் அரசியல் செய்தனர். அந்த மக்கள், மஹிந்தவை மீண்டும் வரவழைத்து, வரத்தை வழங்கியுள்ளனர். வரலாற்றிலேயே அதிக வெற்றியையும் அவருக்கு வழங்கியுள்ளனர்.

“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளியிட்ட தேர்தல் கொள்கைப் பிரகடனத்துக்கு, பொதுமக்கள் ஆணை வழங்கியுள்ளனர். முதற்றடவையாகப் பிரிவினைவாதிகளற்ற அரசாங்கத்தை அமைக்கவுள்ளோம். இது, முழு இலங்கையருக்கும் கிடைத்த வெற்றியாகும். 2009ஆம் ஆண்டில், மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை நிறைவுசெய்து சமாதானத்தைக் கொண்டுவந்ததன் பின்னர், எம்மால் தீர்க்க முடியாத பிரச்சினைகளையும் தீர்க்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஷானிக்கு

# 20 வரை மறியல்



குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர, உப பொலிஸ் பரிசோதகர் ஆகியோர், இம்மாதம் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா பிரதம நீதவான் மஞ்சுள கருணாரத்ன முன்னிலையில், நேற்று (07) இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்குச் சொந்தமானதெனத் தெரிவித்து, ரி-56 ரக துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, போலிச் சாட்சிகளை முன்வைத்த குற்றச்சாட்டில், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கம்பஹா - கலஹெட்டிஹேன பகுதி வீடொன்றின் பின்புறத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த குறித்த துப்பாக்கிகளைக் கைப்பற்றிய ஷானி அபேசேகர உள்ளிட்ட அதிகாரிகள், போலி சாட்சிகளை நீதிமன்றத்தில் முன்னிறுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

(படப்பிடிப்பு: குஷான் பதிராஜ)

நாட்டு மக்கள்

# ‘எதிர்க்கட்சியினரையே மக்கள் வேடிக்கையாகப் பார்த்துள்ளனர்’



ஆளும் தரப்பின் மூன்றிலிரண்டு கோரிக்கையை, எதிர்க்கட்சியினர் வேடிக்கையாகப் பார்த்தனர் எனத் தெரிவித்த செஹான் சேமசிங்க எம்.பி, மக்கள் எதிர்க் கட்சியினரையே வேடிக்கையாகப் பார்த்துள்ளனர் என்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக, அநுராதபுரத்தில் வைத்து ஊடங்களுக்கு மேலும் கருத்துரைத்த அவர், ஆளும் தரப்பினர், நாட்டு மக்களிடம் மூன்றில் இரண்டு அதிகாரத்தைக் கோரிய போதெல்லாம், எதிர்க்கட்சி அதனை வேடிக்கையாகக் கருதியதெனவும் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னரே, ஆளும் தரப்பினர் இந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நாட்டு மக்கள் எதிர்க்கட்சியினரையே வேடிக்கையாகப் பார்த்துள்ளனர் என்பதையே தேர்தல் முடிவுகள் வாயிலாகக் காணமுடிகின்றதெனத் தெரிவித்த அவர், இது போன்றதொரு வெற்றியை, யுத்த வெற்றிக்குப் பின்னரான தேர்தலில் மட்டுமே பதிவுசெய்ய முடிந்தருந்தது என்றும் தெரிவித்தார்.

ரிஷாட்டின்

# அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிப்பு

ஈஸ்டர் தாக்குதலுக்கு நிதியுதவி வழங்கியிருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தன்னைக் கைதுசெய்ய எடுத்துள்ள முயற்சியைத் தடுத்து, இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை, உயர் நீதிமன்றம் நேற்று (07) நிராகரித்துள்ளது.

புவனேக அளுவிஹார, எல்.டீ.பி.தெஹிதெனிய, எஸ்.துரைராஜா உள்ளிட்ட நீதியரசர் குழாம் முன்னிலையில், குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் நூற்றுக்கும் அதிகமான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் விசாரிக்கப்படுவதாக, சட்ட மா அதிபர் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மெரின் புள்ளே இதன்போது தெரிவித்துள்ளார்.

மனுதாரரான முன்னாள் அமைச்சர் கைது செய்யப்படுவாராயின், அது அவருக்கு எதிரான சாட்சிகளை அடிப்படையாக வைத்து, சட்டரீதியாக மாத்திரமே இடம்பெறும் எனவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகளவானவர்கள் காயமடைந்து, பலரது உயிர்கள் காவுகொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணை சிக்கல் மிக்கதென, சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொருவராகத் தம்மைக் கைது செய்வதைத் தடுக்குமாறு, இடைக்காலத் தடையுத்தரவு கோரி நீதிமன்றத்தை நாடுவது, அடுத்தகட்ட விசாரணைகளுக்கு இடையூறாக அமையுமென, மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் முன்வைத்த அடிப்படை ஆட்சேபனையை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் குழாம், ரிஷாட் பதியுதீனின் மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அனுமதியளிக்காமல் நிராகரித்தது.

# ‘கூட்டமைப்புக்கு பாரிய வீழ்ச்சி’

செ.கீதாஞ்சன்



தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாகவே தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனரென, வன்னித் தேர்தல் தொகுதியில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு - கந்தசாமி கோவிலில் வழிபாடுகளை மேற்கொண்ட பின்னர், வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரையாற்றிய அவர், தமிழ் மக்கள் தேசியத்தின்பால் அக்கறை கொண்டு செயற்படுகிற அதேவேளை, தேர்தல்கால ஏமாற்று நடவடிக்கைக்கோ அல்லது சலுகைகளுக்கோ அகப்பட்டு, தமிழினத்தின் மானத்தை விற்பதற்கு அனுமதிக்கக் கூடாதெனவும் கூறியுள்ளார்.

தேர்தல் முடிவுகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு பாரிய வீழ்ச்சியைத் தந்துள்ளது. எதிர்காலத்தில், கூட்டமைப்பின் தலைவர்கள் இது தொடர்பில் விழிப்பாகச் செயற்படாவிட்டால், கூட்டமைப்பு மக்கள் மத்தியில் இருந்து அந்நியப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் இன்னும் விழிப்படையவில்லை என்பது தேர்தல் முடிவுகள் காட்டுவதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மீது குற்றச்சாட்டு இருக்கின்றது; தவறுகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். மக்களுக்கும் இவை புரிந்திருக்கும். இக்குற்றச்சாட்டைத் தொடர்ந்து கூறி, தமிழ் மக்களைக்“ கூட்டமைப்பில் இருந்து பிரித்தெடுப்பதற்கு சில கட்சிகள் முயல்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

நண்பர்கள்
நான் புது நண்பர்களை அறிமுகமாகி நட்புக்கொள்ள ஆவலாக இருக்கிறேன்
MOHAMED IRFAN
077 967 4910

# நாடாளுமன்றத் தேர்தல் 2020 களம்

## கொழும்பு மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | சரத் வீரசேகர | 328,092 |
| 02 | விமல் வீரவன்ச | 267,084 |
| 03 | உதய பிரபாத் கம்மன்பில | 136,331 |
| 04 | விஜேதாஸ ராஜபக்‌ஷ | 120,626 |
| 05 | பந்துல குணவர்தன | 101,644 |
| 06 | பிரதீப் சமன் குமார | 91,958 |
| 07 | தினேஷ் குணவர்தன | 85,287 |
| 08 | மதுர விதானகே | 70,205 |
| 09 | பிரேம்நாத் சி.தொலவத்த | 69,055 |
| 10 | காமினி குலவன்ஷ லொகுகே | 62,543 |
| 11 | சுசில் பிரேமஜயந்த | 50,321 |
| 12 | ஜகத் குமார | 47,693 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | சஜித் பிரேமதாஸ | 305,744 |
| 02 | எஸ்.எம். மரிக்கார் | 96,916 |
| 03 | முஜிப்பூர் ரஹ்மான் | 87,589 |
| 04 | ஹர்ஷ டீ சில்வா | 82,845 |
| 05 | பாட்டளி சம்பிக்க ரணவக்க | 65,574 |
| 06 | மனோ கணேசன் | 62,091 |
| **தேசிய மக்கள் சக்தி** | | |
| 01 | அநுரகுமார திஸாநாயக்க | 49,814 |

## கம்பஹா மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | நாலக்க கொடஹேவா | 325,479 |
| 02 | பிரசன்ன ரணதுங்க | 316,544 |
| 03 | இந்திக்க அநுருத்த | 136,297 |
| 04 | சிசிர ஜயகொடி | 113,130 |
| 05 | நிமல் லன்ஸா | 108,945 |
| 06 | பிரதீப் விதான | 97,494 |
| 07 | சுதர்ஷனி பெர்னான்டோபிள்ளை | 89,329 |
| 08 | பிரசன்ன ரணதுங்க | 83,203 |
| 09 | ஹர்ஷனி குணவர்த்தன | 77,922 |
| 10 | லசந்த அழகியவண்ண | 73,061 |
| 11 | நளின் ருவன்ஜீவ பெர்னான்டோ | 69,800 |
| 12 | மிலான் சஜித் ஜயதிலக்க | 68,449 |
| 13 | உபுல் மஹேந்திர ராஜபக்‌ஷ | 67,756 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | சரத் பொன்சேகா | 110,555 |
| 02 | ரஞ்சன் ராமநாயக்க | 103,992 |
| 03 | ஹர்ஷன ராஜகருணா | 73,612 |
| 04 | காவிந்த ஜெயவர்தன | 52,026 |
| **தேசிய மக்கள் சக்தி** | | |
| 01 | விஜித ஹேரத் | 37,008 |

## களுத்துறை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | விதுர விக்கிரமநாயக்க | 147,958 |
| 02 | ரோஹித அபேகுணவர்த்தன | 147,472 |
| 03 | சஞ்சீவ எதிரிமான்னே | 105,973 |
| 04 | பியால் நிஷாந்த | 103,904 |
| 05 | ஜயந்த சமரவீர | 100,386 |
| 06 | அனுப பெஸ்குவல் | 97,777 |
| 07 | லலித் எல்லாவல | 76,705 |
| 08 | மஹிந்த சமரசிங்க | 58,514 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | ராஜித சேனாரத்ன | 77,476 |
| 02 | குமார வெல்கம | 77,083 |

## காலி மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | ரமேஷ் பத்திரண | 205,814 |
| 02 | சம்பத் அத்துகோரள | 128,331 |
| 03 | மொஹான் பிரியதர்ஷன சில்வா | 111,626 |
| 04 | சந்திமா வீரக்கொடி | 84,984 |
| 05 | இசுறு தொடங்கொட | 71,266 |
| 06 | ஷான் விஜேலால் டி சில்வா | 67,793 |
| 07 | கீதா குமாரசிங்க | 63,357 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | கயந்த குணதிலக்க | 50,097 |
| 02 | மனுஷ நாணயக்கார | 47,399 |

## ஹம்பாந்தோட்டை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | நாமல் ராஜபக்‌ஷ | 166,660 |
| 02 | டி.வீ. சானக்க | 128,805 |
| 03 | மஹிந்த அமரவீர | 123,730 |
| 04 | சமல் ராஜபக்‌ஷ | 85,330 |
| 05 | உபுல் கலப்பத்தி | 63,369 |
| 06 | அஜித் ராஜபக்‌ஷ | 47,375 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | திலிப் வெதஆராச்சி | 25,376 |

## யாழ்ப்பாண மாவட்டம்

| ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | அங்கஜன் ராமநாதன் | 36,365 |
| **இலங்கை தமிழரசுக் கட்சி** | | |
| 01 | எஸ். ஸ்ரீதரன் | 35,884 |
| 02 | எம்.ஏ. சுமந்திரன் | 27,834 |
| 03 | தர்மலிங்கம் சித்தார்த்தன் | 23,840 |
| **ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி** | | |
| 01 | டக்ளஸ் தேவானந்தா | 32,146 |
| **அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்** | | |
| 01 | கஜேந்திரகுமார் பொன்னம்பலம் | 31,600 |
| **தமிழ் மக்கள் தேசிய கூட்டணி** | | |
| 01 | சி.வி விக்னேஸ்வரன் | 21,554 |

## மாத்தறை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | நிபுண ரணவக்க | 131,010 |
| 02 | கருணாதாஸ கொடிதுவக்கு | 114,319 |
| 03 | டலஸ் அழகப்பெரும | 103,534 |
| 04 | காஞ்சன விஜேசேகர | 96,033 |
| 05 | மஹிந்த யாப்பா அபேவர்த்தன | 80,595 |
| 06 | வீரசுமன வீரசிங்க | 77,968 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | புத்திக பத்திரண | 44,889 |

## திருகோணமலை மாவட்டம்

| ஐக்கிய மக்கள் சக்தி | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | எம்.எஸ். தௌஃபிக் | 43,759 |
| 02 | இம்ரான் மஹ்ரூப் | 39,029 |
| **ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன** | | |
| 01 | கபில நுவன் அத்துகோரள | 30,056 |
| **இலங்கை தமிழ் அரசுக் கட்சி** | | |
| 01 | ஆர். சம்பந்தன் | 21,422 |

## திகாமடுல்ல மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | விமலவீர திஸாநாயக்க | 63,594 |
| 02 | டி. வீரசிங்க | 56,006 |
| 03 | திலக் ராஜபக்‌ஷ | 54,203 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | மொஹமட் ஹரீஸ் | 36,850 |
| 02 | மொஹமட் பைசால் | 29,423 |
| **தேசிய காங்கிரஸ்** | | |
| 01 | ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் | 35,697 |
| **அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்** | | |
| 01 | மொஹமட் முஷர்ரப் | 18,389 |

## கண்டி மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | திலும் அமுனுகம | 171,758 |
| 02 | மஹிந்தானந்த அளுத்கமகே | 161,471 |
| 03 | லொஹான் ரத்வத்த | 140,917 |
| 04 | அநுராத ஜயரத்ன | 140,798 |
| 05 | கெஹெலிய ரம்புக்வெல்ல | 110,832 |
| 06 | வசந்த யாப்பா பண்டார | 108,940 |
| 07 | குணதிலக்க ராஜபக்‌ஷ | 49,317 |
| 08 | உதயன சமிந்த கிரின்கொட | 39,904 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | ரவூப் ஹக்கீம் | 83,398 |
| 02 | அப்துல் ஹலீம் | 71,063 |
| 03 | எம். வேலுகுமார் | 57,445 |
| 04 | லக்ஷ்மன் கிரியெல்ல | 52,311 |

## வன்னி மாவட்டம்

| ஐக்கிய மக்கள் சக்தி | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | ரிஷாட் பதியுதீன் | 28,203 |
| **இலங்கை தமிழரசுக் கட்சி** | | |
| 01 | சார்ள்ஸ் நிர்மலநாதன் | 25,668 |
| 02 | செல்வம் அடைக்கலநாதன் | 18,563 |
| 03 | வினோநோகராதலிங்கம் | 15,180 |
| **ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன** | | |
| 01 | காதர் மஸ்தான் | 13,454 |
| **ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி** | | |
| 01 | குலசிங்கம் திலீபன் | 3,203 |

## மாத்தளை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | ஜானக்க பண்டார தென்னகோன் | 73,296 |
| 02 | நாலக்க பண்டார கோட்டேகொட | 71,404 |
| 03 | பிரமித பண்டார தென்னகோன் | 67,776 |
| 04 | ரோஹண திஸாநாயக்க | 50,368 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | ரோஹிணி கவிரத்ன | 27,587 |

## நுவரெலியா மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | ஜீவன் தொண்டமான் | 109,155 |
| 02 | சி.பி ரத்நாயக்க | 70,781 |
| 03 | எஸ்.பி திஸாநாயக்க | 66,045 |
| 04 | எம். ரமேஷ்வரன் | 57,167 |
| 05 | நிமல் பியதிஸ்ஸ | 51,225 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | பழனி திகாம்பரம் | 83,392 |
| 02 | வே.இராதாகிருஷ்ணன் | 72,167 |
| 03 | எம்.உதயகுமார் | 68,119 |

## மட்டக்களப்பு மாவட்டம்

| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | சிவநேசத்துரை சந்திரகாந்தன் | 54,198 |
| **இலங்கை தமிழரசுக் கட்சி** | | |
| 01 | சாணக்கியன் ராகுல் | 33,332 |
| 02 | கோவிந்தன் கருணாகரன் | 26,382 |
| **ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன** | | |
| 01 | எஸ். வியாழேந்திரன் | 22,218 |
| **ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்** | | |
| 01 | நஸீர் அஹமட் | 17,599 |

## குருநாகல் மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | மஹிந்த ராஜபக்‌ஷ | 527,364 |
| 02 | ஜோன்ஸ்டன் பெர்னான்டோ | 199,203 |
| 03 | குணபால ரத்னசேகர | 141,991 |
| 04 | தயாசிறி ஜயசேகர | 112,452 |
| 05 | அசங்க நவரட்ன | 82,779 |
| 06 | சமன்பிரிய ஹேரத் | 66,814 |
| 07 | டி.பி. ஹேரத் | 61,954 |
| 08 | அநுர பிரியதர்ஷன யாப்பா | 59,696 |
| 09 | ஜயரட்ண ஹேரத் | 54,351 |
| 10 | ஷாந்த பண்டார | 52,086 |
| 11 | சுமித் உடுகும்புர | 51,134 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | நளின் பண்டார | 75,631 |
| 02 | ஜே.சி.அலவத்துவல | 65,956 |
| 03 | அஷோக்க அபேசிங்க | 54,512 |
| 04 | துஷார இந்துநில் | 49,364 |

## புத்தளம் மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | சனத் நிஷாந்த பெரேரா | 80,082 |
| 02 | பிரியங்கர ஜயரட்ண | 74,425 |
| 03 | அருந்திக பெர்ணாந்து | 70,892 |
| 04 | சித்தக அமல் மாயாதுன்ன | 46,058 |
| 05 | அஷோக்க பிரியந்த | 41,612 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | ஹெக்டர் அப்புஹாமி | 34,127 |
| 02 | நிரோஷன் பெரேரா | 31,636 |
| **முஸ்லிம் தேசிய கூட்டணி** | | |
| 01 | அப்துல் அலி சப்ரி | 33,509 |

## இரத்தினபுரி மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | பவித்ரா வன்னியாரச்சி | 200,977 |
| 02 | பிரேமலால் ஜயசேகர | 104,237 |
| 03 | ஜானக்க வக்கும்புற | 101,225 |
| 04 | காமினி வலேபொட | 85,840 |
| 05 | அகில வெல்லாவல | 71,179 |
| 06 | வாசுதேவ நாணாயக்கார | 66,991 |
| 07 | முதிதா பிரஷாந்தி | 65,923 |
| 08 | ஜோன் செனவிரட்ண | 61,612 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | ஹேஷான் விதானகே | 60,426 |
| 02 | வருண பிரியந்த லியனகே | 47,494 |
| 03 | தலதா அத்துக்கோரள | 45,105 |

## கேகாலை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | கனக்க ஹேராத் | 128,592 |
| 02 | ரஞ்சித் சியம்பலாபிட்டிய | 103,300 |
| 03 | தாரக பாலசூரிய | 96,763 |
| 04 | ராஜிக்க விக்கிரமசிங்க | 68,802 |
| 05 | எச்.ஆர். மித்ரபால | 58,306 |
| 06 | சுதத் மஞ்சுள | 45,970 |
| 07 | உதயகாந்த குணதிலக்க | 46,628 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | கபீர் ஹாஷிம் | 58,716 |
| 02 | சுஜித் சஞ்சய | 28,082 |

## அநுராதபுரம் மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | எஸ்.எம். சந்திரசேன | 139,368 |
| 02 | சன்ன ஜயசுமன | 133,980 |
| 03 | உத்திக பிரேமரட்ண | 133,550 |
| 04 | ஷெஹான் சேமசிங்க | 119,878 |
| 05 | துமிந்த திஸாநாயக்க | 75,535 |
| 06 | எச்.நந்தசேன | 53,618 |
| 07 | கே.பி.எஸ்.குமாரசிறி | 49,030 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | இஷாக் ரஹ்மான் | 49,290 |
| 02 | ரோஹண பண்டார | 39,520 |

## பொலன்னறுவை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | மைத்திரிபால சிறிசேன | 111,137 |
| 02 | ரொஷான் ரணசிங்க | 90,615 |
| 03 | சிறிபால கம்லத் | 67,917 |
| 04 | அமரகீர்த்தி அத்துகோரல | 45,939 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | கின்ஸ் நெல்சன் | 22,392 |

## பதுளை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | நிமல் சிறிபால டி சில்வா | 141,901 |
| 02 | சுதர்ஷன தெனிபிட்டிய | 71,766 |
| 03 | தேனுக்க விதானகமகே | 68,338 |
| 04 | சாமர சம்பத் தஸநாயக்க | 66,393 |
| 05 | டிலான் பெரேரா | 53,081 |
| 06 | ஜானக திஸ்ஸகுட்டியாராச்சி | 50,151 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | வடிவேல் சுரேஸ் | 49,762 |
| 02 | அ.அரவிந்தகுமார் | 45,491 |
| 03 | சமிந்த விஜேசிறி | 36,291 |

## மொனராகலை மாவட்டம்

| ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன | | விருப்பு வாக்குகள் |
|---|---|---|
| 01 | ஷஷீந்திர ராஜபக்‌ஷ | 104,729 |
| 02 | குமாரசிறி ரத்நாயக்க | 91,530 |
| 03 | விஜித்த பேருகொட | 68,984 |
| 04 | ஜகத் புஷ்பகுமார | 66,176 |
| 05 | கயஷான் நவாநந்த | 45,384 |
| **ஐக்கிய மக்கள் சக்தி** | | |
| 01 | தர்மசேன விஜேசிங்க | 20,662 |

# அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் தலைக்கனம் தவிர்

பூசிய மை காய்வதற்குள் விபசார அரசியலுக்குப் பேரம்பேசவேண்டிய தேவை, 2020 பொதுத் தேர்தலில் ஏற்படவில்லை என்பதையிட்டு, பெரும் சந்தோஷம் கொள்ளவேண்டும். இல்லையேல், மக்களின் வாக்குகளால் வெல்லப்பட்டவர்களை வளைத்திழுக்கும் பேரம் பேசல்களுக்குப் பஞ்சமே இருந்திருக்காது. ஆனால், இனித்தான் மிகக் கவனமாக, சிறுபான்மையினர் 'காய்களை' நகர்த்த வேண்டும். அடிப்படைவாதிகள் நிறைந்த கூடாரத்துக்குள் இருந்துகொண்டு, அடிப்படைவாதிகளுக்கு இடமில்லையென அறிவிப்பொன்றை விடுவது, எவ்வளவு முட்டாள்தனமானது.

தங்களது விருப்பு வாக்குகளால், 196 பேரை வாக்காளர்கள் தெரிவு செய்துவிட்டனர். இன்னும் 29 பேரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர்கள், அரசியலில் நேரடித் தொடர்பில்லாத, புத்திஜீவிகள், அறிஞர்கள், சமூகத்தின்பால் அக்கறை கொண்டவர்களாக இருப்பர். அதற்காக, தேசிய பட்டியல் முறைமை உருவாக்கப்பட்டது.

ஆனால், அரசமைப்புக்குள் புகுந்து விளையாடி, ஆட்சியதிகாரத்தை இறுகப்பிடித்துக் கொள்வதற்காக, சண்டியர்கள், பணக்காரர்கள், நண்பர்கள், கோமாளிகள், நடிகர்களென தேசிய பட்டியல் மதிப்பிழந்து செல்கிறது.

துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற 'தேசிய பட்டியல்'களை அர்த்தபுஷ்டியாக்க வேண்டும். இல்லையேல், சாக்கடை அரசியல், இன்னுமின்னும் நாற்றமெடுக்கும். புத்திஜீவிகளை, நாடாளுமன்றத்துக்கு அனுப்புதல் எதிர்காலத்தில் கேள்விக்குறியாகலாம்.

'தேசிய பட்டியல்' பெயர்கள் அடங்கிய விவரம், ஏற்கெனவே, அறிவிக்கப்பட்டிருந்தாலும் தங்களுக்குத் தேவையானவர்களே, நாடாளுமன்றத்துக்கு ஒவ்வொருமுறையும் அனுப்பப்படுகின்றனர். தேர்தலில் தோல்வியைத் தழுவியவர்களும் கடந்த காலங்களில் தேசிய பட்டியலில் தொற்றிக்கொண்டிருந்தனர். இந்த முறைமை, முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும். குறிப்பாக, சிறுபான்மை இனத்தின் ஊடான தேசிய பட்டியல் தெரிவில், ஆகக்கூடுதலான அக்கறை காட்டவேண்டும்.

விசித்திரமான அரசியல் அகராதியில், கழுத்தறுப்பு, துரோகம், காய்வெட்டல் என்பவற்றுக்கு 'இராஜதந்திரம்' எனக்கூறிக்கொள்ளும் அரசியலில் 'கொட்டைபோட்டவர்கள்' தேசிய பட்டியலின் ஊடாக, மிக இலாவகமாகவே அதனைக் கையாண்டுகொள்வர்.

மக்களின் மனோநிலை என்னவென்பதை, இத்தேர்தல் பெறுபேறுகள் அச்சொட்டாகப் படம்போட்டுக் காண்பித்துள்ளன. இதில், தேசிய பட்டியல் தெரிவு, அதிர்ஷ்ட இலாபச் சீட்டைப் போன்றதாகும். அதில் சுரண்டி விளையாடிவிடக்கூடாது.

தோல்வியடைந்தாலும் மக்களுக்கு சேவையைச் செய்யக் கூடியவர்களைத் தேசிய பட்டியலின் ஊடாகத் தெரிவுச் செய்வதில் தவறில்லை. எனினும், சரியான பாதையில் ஆட்சியை வழி நடத்தக் கூடியவர்களைத் தேசிய பட்டியலின் ஊடாகத் தெரிவுசெய்ய வேண்டும். இதில், தலைவர்கள் தலைக்கனத்துடன் செயற்பட்டுவிடக்கூடாது.


தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk




## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

அறிவைச் சிறை செய்யாதீர்கள். அதைச் சுதந்திரமாக இயங்க விடுங்கள். எல்லையில்லாத ஆற்றலுக்கு, முற்றுப்புள்ளி இடுதல் அபத்தமா?

இன்று அநேகமானவர்கள், படித்து முடித்துவிட்டேன் எனச் சொல்வது மாபெரும் பொய். எந்தத் துறையில் கரை கண்டு விட்டாய்? அறிவுத் தேடலுக்கு, ஏது கட்டுப்பாடு?

பட்டதாரிகள் குறித்த ஒரு பட்டத்தையே முழுமையானது எனக் கருதி, படிப்புக்குக் கடிவாளம் இட்டுவிடுகின்றார்கள். அப்படி என்ன கண்டுபிடிப்புகளைச் செய்துவிட்டார்கள்?

சரி! நீங்கள் ஒரு கண்டுபிடிப்பாளராக இருப்பினும், அதை நிறுத்தாதீர்கள். விஞ்ஞானிகள் ஓரிரு விடயத்தை மட்டும் கண்டுபிடித்துவிட்டு ஓய்ந்து விடுவதில்லை. புதியவற்றைக் கண்டுபிடித்த வண்ணமே இருப்பார்கள். அவர்கள் ஓய்ந்திருந்தால், உலகின் நிலை என்ன?

புதிய கண்டுபிடிப்பாளர்கள், உருவாகிக்கொண்டே இருப்பதால்தான், புதிய கண்டுபிடிப்புகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன.

ஒவ்வொரு பிரஜையும் பிரமாக்களாக வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தேர்தல் முடிவுகளில் இருந்தான தொடக்கம்

**மொஹமட் பாதுஷா**

அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்கு நாட்டையும் மக்களையும் ஆட்சி செய்வதற்கான ஆணையை, ஜனநாயக வழிமுறையில் வழங்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் இறுதிப் பெறுபேறுகள், வெளியாகி விட்டன. இதன்படி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கு மிகக் கிட்டிய 147 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி கட்சி, பிரதான எதிர்க்கட்சியாக அங்கம் வகிக்குமளவுக்கு 54 ஆசனங்களைத் தன்வசப்படுத்திக் கொண்டுள்ளது.

### சிறப்பான வாக்குப்பதிவு

கொவிட்-19 பரவல் காரணமாக, இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் கிட்டத்தட்ட மூன்றரை மாதங்களாக ஒத்தி வைக்கப்பட்டது. அரசாங்கமும் தேர்தல் ஆணைக்குழுவும் எவ்வித விமர்சனங்களையும் பொருட்படுத்தாமல், ஒகஸ்ட் ஐந்தாம் திகதி தேர்தலை நடத்துவது என்ற முடிவுக்கு வந்தன.

தேர்தலின் போதான விசேடமான சுகாதார விதிமுறைகளும் தயாரிக்கப்பட்டன. ஆனால், வாக்கெடுப்பு தினம் வரை, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை, தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமே இருந்தது. எந்த நேரத்திலும், சமூகப் பரவல் திடீரென அதிகரித்து விடுமோ என்ற அச்சமும் வாக்கெடுப்பில் மக்கள் ஆர்வம் காட்ட மாட்டார்களோ என்ற கவலையும் பரவலாக ஏற்பட்டிருந்ததை மறுக்க முடியாது.

ஆனால், தேர்தலில் வாக்களிப்பு சதவீதம் திருப்திகரமானதாக அமைந்துள்ளது எனலாம். நாட்டிலுள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் ஒரேநேரத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பில், 18 மாவட்டங்களில் 70 சதவீதத்துக்கு அதிக சதவீதமான வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளது. இந்தப் பின்னணியில், நாடு தழுவிய ரீதியில் வாக்களிப்பு 71 சதவீதம் ஆகும்.

வாக்களிப்பு சதவீதத்தின்படி, ஒரு கோடியே 23 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்திருக்கின்றார்கள். அதேபோல், கிட்டத்தட்ட 39 இலட்சம் வாக்குகள் அளிக்கப்படவில்லை. இது கணிசமான வாக்குகளாகும். வாக்களிப்பில் விருப்பமின்மை, வெளிநாடுகளில் தொழில்புரிகின்றமை, நோய், முதுமை,வெளிநாட்டில் நிரந்தரமாகக் குடியேறிவிட்ட சிலரும், வாக்காளர் இடாப்பில் தமது பெயர்களை நீக்காமல் இருக்கின்றமை போன்றவற்றை, இதற்குக் காரணங்களாகக் கூறலாம்.

### வெற்றியின் நிகழ்தகவு

2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சி, 106 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 95 ஆசனங்களையும் பெற்றன. தமிழரசுக் கட்சி 16 ஆசனங்களையும் மக்கள் விடுதலை முன்னணி ஆறு ஆசனங்களையும் பெற்றதுடன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் தலா ஒவ்வோர் ஆசனங்களைப் பெற்றிருந்தன. தனியே 113 ஆசனங்களைப் பெற்றிராத ஐக்கிய தேசிய கட்சி, ஏனைய சிறுபான்மை, சிறுகட்சிகளின் ஆதரவுடன் கூட்டாட்சியொன்றை நிறுவியது.

இந்தமுறை, தேர்தலில் மேற்படி பெறுபேற்றுக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக, பிரதான ஆட்டக்காரர்களாக இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (ஐ.ம.வி.மு), ஐக்கிய தேசிய கட்சி ஆகியவை, இந்தத் தேர்தலில் அந்த அந்தஸ்தை இழந்து விட்டிருப்பதைப் பெறுபேறுகள் வெளிப்படுத்துகின்றன.

இருகட்சிகளும், தலா ஒவ்வோர் ஆசனங்களைப் பெற்றுள்ளன. குறிப்பாக, நீண்டகாலம் இந்த நாட்டை ஆட்சி செய்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, தோற்றது மட்டுமன்றி, ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தை மட்டும் பெற்று, அக்கட்சி தேசிய அரசியலில் ஓரங்கட்டப்பட்டுள்ளது எனலாம்.

### தேர்தல் முடிவுகள்

வெளியாகிய தேர்தல் முடிவுகளின் படி, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தேசிய பட்டியல் உள்ளடங்கலாக 145 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய பட்டியலுடன் சேர்த்து 54 ஆசனங்களைப் பெற்றுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சிக்கு 10 ஆசனங்களும் தேசிய மக்கள் சக்திக்கு மூன்று ஆசனங்களும் கிடைத்துள்ளன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, எங்கள் மக்கள் சக்தி, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகள், தலா ஒவ்வோர் ஆசனத்தை (வென்று அல்லது, தேசிய பட்டியல் ஊடாக) இத்தேர்தலில் பெற்றுக் கொண்டுள்ளன. அத்துடன், அ.இ.த.காங்கிரஸ், ஈ.பி.டி.பி.க்கு தலா இரண்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

2019 நவம்பர் 16ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், கோட்டாபய ராஜபக்‌ஷ வெற்றிபெற்ற சில மாதங்களில், நாடாளுமன்றத்தைக் கலைத்து, நடத்தப்பட்ட பொதுத் தேர்தல் என்பதாலும், நாட்டின் அரசியல் களநிலைவரங்கள், ரணில் - சஜித் கூட்டுறவு இல்லாமை போன்ற காரணங்களாலும் இந்த வெற்றி, எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆயினும், மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துடனான ஆட்சியென்பது, அதுவும் சிறுபான்மையினரின் குறைவான பங்களிப்புடன் அது நிகழ்வது, சற்று அபூர்வமான அரசியல் நிகழ்வு என்றே கூற வேண்டும்.

இத்தேர்தலில், முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ் கூட்டாகவும், அதேபோன்று இவ்விரு கட்சிகளும் ஐ.ம.சக்தியுடன் இணைந்தும் தனித்தும் போட்டியிட்டன. அத்துடன் தேசிய காங்கிரஸ், ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் தனித்துப் போட்டியிட்டன. இதுதவிர, அநேகமான முஸ்லிம்கள், பெருந்தேசியக் கட்சிகளில் நேரடியாகப் போட்டியிட்டனர்.

இந்நிலையில், வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளின் பிரகாரம், முன்னாள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏழு பேர், இத்தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர். முஸ்லிம் வேட்பாளர்களில் 15 பேர் இத்தேர்தலில் வெற்றியீட்டியுள்ளனர். குறிப்பாக, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்ற தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ் உள்ளடங்கலாக மூன்று பிரதான காங்கிரஸ்களினதும் தலைவர்கள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழர் அரசியலைப் பொறுத்தமட்டில், தமிழரசுக் கட்சியின் ஊடான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறைவடைந்துள்ளது. விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா), திகாமடுல்லை மாவட்டத்தில் போட்டியிட்டதால், அங்கு தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டுள்ளது. இதையெல்லாம் தாண்டி, தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் ஊடாகவும் பெரும்பான்மைக் கட்சிகளின் வாயிலாகவும் 25 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், பொதுஜன பெரமுன (இன்னும் ஐந்து எம்.பிக்களை இணைத்துக் கொண்டு) மூன்றிலிரண்டு பெரும்பான்மையை நிரூபிக்கக் கூடிய புதிய நாடாளுமன்றத்திலும் முஸ்லிம், தமிழ் மக்களுக்கு ஓரளவுக்கு திருப்திகரமான எண்ணிக்கையிலான பிரதிநிதித்துவங்கள் கிடைத்துள்ளதாகவே கருத முடிகின்றது.

எனவே, இப்போது செய்ய வேண்டியது, தேர்தல் முடிவுகளில் இருந்து தொடங்கும் புதிய ஆட்சி அத்தியாயத்தில், சிறுபான்மையினர் தமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களைக் காத்திரமாகப் பயன்படுத்துவதாகும்.

### மக்களின் மனநிலை

நாட்டின் சீரழிவுக்குக் காரணமான அரசியல் கலாசாரம் மாற வேண்டும் என்று, சிறுபான்மை முஸ்லிம்களும் தமிழர்களும் வேண்டி நிற்கின்றனர். இந்நிலையில், தமது வாக்குகளின் பெறுமதியுணர்ந்து, பொறுப்புணர்வுடன் ஒவ்வொரு வாக்காளரும், பொருத்தமான வேட்பாளருக்குப் புள்ளடி இட்டிருந்தால், நல்லமாற்றங்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. சமூகம், அதன் பலாபலன்களை அடுத்த ஐந்து வருடங்களுக்கு அனுபவிக்கலாம்.

அவ்வாறின்றி,பொருத்தமற்றவர்களை இம்முறையும் தெரிவு செய்திருப்பின், நம்பிக்கையுடன் தெரிவு செய்யப்பட்டவர்கள் தலைகீழாகச் செயற்பட்டால், அதன் எதிர்விளைவுகளையும் இழப்புகளையும் சமூகமே எதிர்கொள்ள வேண்டி ஏற்படும்.

ஒரு தேர்தல் என்றால், ஒரு தரப்புக்கு வெற்றியும் மறுதரப்புக்குத் தோல்வியும் நிச்சயமானதே. அதனடிப்படையிலேயே, தேர்தலுக்குப் பின்னரும், நமது அன்றாட வாழ்வும் அரசியலும் நீளப் போகின்றது என்பதை மறந்து விடக் கூடாது. இந்தக் கட்டத்தில்தான் சில விடயங்களில், மிகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

### அமைதியாகச் செயற்படல்

முதலாவது, தேர்தல் முடிவுகளுக்குப் பின்னரான அமைதியைப் பேணுவது அவசியமாகும். வெற்றி பெற்றவர்கள், தன்னிலை மறந்து கொண்டாட்டங்களில் ஈடுபடுவதும், கடந்த காலங்களைப் போல, எதிரணியில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் தாக்க முற்படுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.அரசியல்வாதிகளும் அவர்களது குண்டர்களும் எந்தத் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலும் அமைதியின்மையைத் தோற்றுவிக்க நினைக்கக் கூடாது.

தேர்தல் அரசியலில், மக்கள் எழுதிய தீர்ப்புக்குத் தலை வணங்க வேண்டும். யாரும் யாருடனும் சண்டையிட்டுக் கொள்ளத் தேவையில்லை. தேவையில்லாத அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தி, அதன்மூலம் நெருக்கடிகளை ஏற்படுத்திவிடக் கூடாது.

தங்கள் நிலைப்பாடுகளை, எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளக் கூடியவர்களான அரசியல்வாதிகளுக்காகவும் கட்சிகளுக்காகவும் இளைஞர்கள் தங்களுக்கு இடையில் முரண்பட்டுக் கொள்வார்களாயின், அதைப்போல அறிவிலித்தனம் வேறொன்றும் இருக்க முடியாது.

இத்தேர்தல் முடிவுகள், இன்னுமொரு யுக அரசியலின் தொடக்கம் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். எனவே, இம்முறை யார் ஆட்சிக்கு வந்தாலும், சிறுபான்மை மக்கள் விடயத்தில், ஒரு மென்போக்கைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. பெரும்பான்மைப் பலம் உள்ளது என்பதற்காக, சிங்கள இனவாத சக்திகளுக்குக் கொம்பு முளைக்கச் செய்யும் முன்னெடுப்புகளுக்கு, ஆட்சியாளர்கள் துணை போகக் கூடாது.

அதேநேரம், ஒட்டுமொத்த சிறுபான்மைச் சமூகமும் தேர்தலுக்குப் பின்னரான அரசியலில் மிகவும் புத்திசாலித்தனமாக நகர்வுகளை மேற்கொள்வதுடன், குறிப்பாக, முஸ்லிம் எம்.பிக்கள் தமது பதவியின் கனதியையும் தார்ப்பரியத்தையும் உணர்ந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

## கடிதங்கள்

### சொறிக்கல்முனை கிராமத்தில் பொதுநூலகத்தின் அவசியம்

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு உட்பட்ட சொறிக்கல்முனை கிராமத்தில், பொதுநூலகம் இல்லாமையால், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாக வாசகர்களும் மாணவர்களும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு உட்பட்டு, 20 கிராம அலுவலர் பிரிவுகள் இருந்தபோதிலும், ஓரிரண்டு நூலகங்களே இயங்குகின்றன. இந்நிலையில், நீண்ட தூரத்துக்கு, கால்நடையாகவோ, சைக்கிளிலோ பயணித்தே நூல்நிலையத்தின் பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவலநிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, சவளக்கடை, அன்னைமலை, சாளம்பங்கேணி, வேம்படித்தோட்டம், ஏழாம் கிராமம், வேப்பையடி, 15ஆம் கிராமம், இலுப்பைக்குளம் போன்ற கிராமங்களில் நூல் நிலையம் இல்லாமையால் மக்கள் தமது அறிவுப்பசியைப் போக்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றார்கள்.

இதனால், மேற்படி பிரதேச மாணவர்களும் மக்களும் தமது வாசிப்புத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகத் தொலைவில் உள்ள, கல்முனை பொதுநூலகத்துக்கு நாளாந்தம் செல்ல வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, கிராம மக்களினதும் மாணவர்களினதும் நலன்கருதி, சகல வசதிகளுடன் கூடிய வாசிகசாலையை, சொறிக்கல்முனை கிராமத்தில் அமைப்பதற்கு உரிய அதிகாரிகள், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–பொன். காந்திராஜா

அம்பாறை மாவட்டத்தில்

# 280 வன்முறைகள் பதிவாகின

■ எம்.எஸ்.எம். ஹனீபா



அம்பாறை மாவட்டத்தில், 280 தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம். அப்துல் லத்தீப், நேற்று (07) தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பிரதேச தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவில் 64 முறைப்பாடுகளும் அம்பாறை மாவட்டச் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாவட்ட முறைப்பாட்டுப் பிரிவில் 216 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

லகுகல, பொத்துவில், திருக்கோவில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, கல்முனை, நாவிதன்வெளி, கல்முனைத் தமிழ் பிரிவு ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் தொடர்பாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கரையோரப் பிரதேச முறைப்பாட்டுப் பிரிவில் பதிவாகியுள்ளதாகவும் கூறினார்.

அம்பாறை மாவட்டச் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாவட்ட முறைப்பாட்டுப் பிரிவிலும் மக்கள் தங்களது தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்ததாகவும் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்புரைக்கமைய இத் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவுகள், கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி முதல் இயங்கிவருவதாக, மேலதிக அரசாங்க அதிபர் ஏ.எம். அப்துல் லத்தீப் மேலும் தெரிவித்தார்.

# ‘கூட்டமைப்பின் தேசிய பட்டியல் அம்பாறைக்கே வழங்க வேண்டும்’

■ வி. சுகிர்தகுமார்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவியை, அம்பாறை மாவட்டத்துக்கே வழங்க வேண்டும் எனும் கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது.

இப்பதவியை, அம்பாறை மாவட்டத்துக்கே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவம் வழங்க வேண்டும் என, கட்சியின் ஆதரவாளர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த தேர்தலில், பல கட்சிகளின் ஊடுருவலால் சுமார் 26,000 வாக்குகளை மாத்திரமே தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் பெற முடிந்தது. இதனால், மாவட்டத்துக்கான தமிழ்ப் பிரதிநிதித்துவம், தற்போது இழக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகளின் பிரகாரம், யாழ். தேர்தல் மாவட்டத்திலிருந்து மூவரும் வன்னி தேர்தல் மாவட்டத்திலிருந்து மூவரும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்திலிருந்து ஒருவரும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்திலிருந்து இருவருமாக, 9 உறுப்பினர்களும் தேசியப்பட்டில் மூலம் ஒருவருமாக 10 உறுப்பினர்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மூலம் தெரிவாகியுள்ளனர்.

இந்நிலையில், திகாடுல்ல தேர்தல் மாவட்டத்திலிருந்து துரதிர்ஷ்டவசமாக ஒரு பிரதிநிதியையும் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, அம்பாறை மாவட்டம், 52 தமிழ்க் கிராமங்களை உள்ளடக்கிய பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் மாவட்டமாகவும் பல்வேறு அபிவிருத்திகள், இருப்புகள் தொடர்பான பிரச்சினைகளையும் உள்ளடக்கிய பிரதேசமாகவும் இருந்து வருகின்றது.

இந்நிலையில், 1994ஆம் ஆண்டிலும், இதுபோன்றதொரு நிலை அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்டு, பாரிய பின்னடைவுகளைத் தமிழ்ச் சமூகம் சந்தித்ததோடு, இன்றுவரை தீர்வுகாண முடியாத பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துவருகின்றது.

இவற்றைக் கருத்திற்கொண்டு, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ள தேசிய பட்டியல் ஆசனத்தை, அம்பாறை மாவட்டத்துக்கே இம்முறை வழங்கி, பொதுமக்களின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றப்படும் எனும் நம்பிக்கை, இங்கு வாழும் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

இல்லாது போனால், எதிர்காலத்தில் அம்பாறையில் பல மாற்றங்கள் உருவாவதுடன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாரிய பின்னடைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பில்

# 97 பாடசாலைகளில் கிருமித்தொற்று நீக்கல்



கொழும்பில் வாக்கெண்ணும் மத்திய நிலையங்களாகச் செயற்பட்ட 97 பாடசாலைகளை, கிருமித்தொற்று நீக்கி சுத்திகரிக்கும் பணிகள், நேற்று (7) ஆரம்பிக்கப்பட்டன என்று, கொழும்பு பிரதான சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கொழும்பு ரோயல் கல்லூரி, தேர்ஸ்டன், இஸிபதன ஆகிய பாடசாலைகள் முதலாவதாகச் சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அனைத்துப் பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்புப் பணிகளும் முன்னெடுக்கப்படுவதாக, வைத்தியர் ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

ரவிராஜின் சிலைக்கு

# கறுப்பு, சிவப்பு துணி போர்த்தி எதிர்ப்பு

■ எஸ். நிதர்ஷன், எம். றொசந்த்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலைக்கு, கறுப்பு, சிவப்பு துணிகளைப் போர்த்தி, சசிகலாவின் ஆதரவாளர்கள் தமது எதிப்பை வெளியிட்டுள்ளனர்.

அமரர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக, சாவகச்சேரி தொகுதியில் போட்டியிட்டிருந்தார்.

அந்தவகையில், நேற்றிரவு வெளியான விருப்பு வாக்கில் அவர் முன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் வெளியான உத்தியோகபூர்வ அறிவிப்பில், அவர் 4ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அவருக்கு அநீதி இழைக்கப்பட்டதாகத் தெரிவித்து அவரது குடும்பத்தாரும் ஆதரவாளர்களும், சாவகச்சேரியில் அமைந்துள்ள ரவிராஜின் உருவச்சிலைக்கு கறுப்பு, சிவப்பு துணிகளை அணிவித்து தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.




மலையகத்தில் சீரற்ற வானிலை தொடர்கிறது;

# நீர்நிலைகள் பெருக்கெடுப்பு

■ கே. சுந்தரலிங்கம்



மலையகத்தில் நீடித்துவரும் சீரற்ற வானிலை காரணமாக, மக்களின் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், நீர்நிலைகள் பெருக்கெடுத்துள்ளதால், பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, மேல்கொத்மலை, மவுசாகலை ஆகிய நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் எனவே, தாழ்நிலப்பகுதிகளில் வாழும் மக்கள், அவதானமாக இருக்குமாறும் நீர்த்தேக்கத்துக்கான அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை காசல்ரீ, கெனியோன், நவலக்ஷ்பான, பொல்பிட்டிய உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வெகுவாக அதிகரித்து வருவதாக, மின்சாரசபை பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடைமழை காரணமாக, நுவரெலியா மாவட்டத்தில் பல இடங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, மலைப்பாங்கான பகுதிகளில் வாழும் மக்கள், மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மழை காரணமாக ஹட்டன் - கொழும்பு வீதியில் கலுகல, பிட்டவல, கினிகத்தேனை, கடவல, தியகல, வட்டவளை, உள்ளிட்ட பகுதிகளிலும் ஹட்டன் - நுவரெலியா வீதியில் குடாகம, கொட்டகலை உள்ளிட்ட பகுதிகளிலும் கடும் பனிமூட்டம் காணப்படுவதால், வளைவுகள் நிறைந்த இந்த வீதிகளைப் பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாகத் தமது வாகனங்களைச் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பிரதான வீதிகளில் பனிமூட்டம் நிறைந்து காணப்படுவதால், வாகனங்களின் முன் விளக்குகளை ஒளிரவிட்டு வாகனங்களைச் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

புத்தளத்தில்

# 33 வருடங்களின் பின்னர் இரு எம்.பிகள் தெரிவு

■ ரஸீன் ரஸ்மின்



புத்தளம் மாவட்டம், புத்தளம் தேர்தல் தொகுதியிலிருந்து 33 வருடங்களுக்குப் பின்னர், இருவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில், புத்தளம் மாவட்டத்தில் போட்டியிட்ட சிந்தக்க அமல் மாயாதுன்ன 46,058 விருப்பு வாக்குகளையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில், முஸ்லிம் தேசிய கூட்டணியின் தராசு சின்னத்தில் போட்டியிட்ட அலிசப்ரி ரஹீம் 33,509 விருப்பு வாக்குகளையும் பெற்று, 33 வருடங்களுக்குப் பின்னர் புத்தளம் தொகுதியிலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

1989ஆம் ஆண்டுக்குப் பின்னர், புத்தளம் தொகுதியிலிருந்து சிறுபான்மை, பெரும்பான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரையும் தெரிவுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய பட்டியலை

# இரத்தினபுரிக்கு வழங்க வலியுறுத்தல்

ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு, ஆறு ஆசனங்கள் கிடைத்துள்ள நிலையில், அந்தக் கட்சிக்குக் கிடைக்கும் தேசிய பட்டியல் உறுப்புரிமையை இரத்தினபுரிக்கு வழங்குவதற்குத் தலைமைத்துவம் இம்முறையேனும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட தமிழ் அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் கோரிக்கை விடுக்கின்றார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சந்திரகுமாருக்கு, அந்தத் தேசிய பட்டியல் உறுப்புரிமை வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ள நிலையில், இரத்தினபுரி மாவட்டத்துக்கான தமிழ் பிரதிநிதித்துவம் மற்றுமொருமுறை இல்லாது போயுள்ள பின்னணியிலேயே, அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் இரத்தினபுரியில் போட்டியிட்ட சந்திரகுமார், கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளமையால், தேசிய பட்டியல் உறுப்புரிமையை அவருக்கு வழங்க தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

கடந்தமுறை நாடாளுமன்றத் தேர்தலிலும் சந்திரகுமார் கணிசமான அளவு வாக்குகளைப் பெற்றுக்கொண்ட போதிலும், இரத்தினபுரிக்குக் கிடைக்கவிருந்த தேசிய பட்டியல் உறுப்புரிமை இல்லாது போயிருந்ததை எஸ்.ஆனந்தகுமார் இதன்போது நினைவூட்டினார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில், தேசிய பட்டியலுக்கு ஒருவர் ஏற்கெனவே முன்மொழியப்பட்டுள்ள போதிலும், நுவரெலியா மாவட்டத்துக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தேர்தலின் ஊடாக மூன்று பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



**“ நுவரெலியா மாவட்டத்துக்கு தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தேர்தலின் ஊடாக மூன்று பிரதிநிதித்துவம் கிடைத்துள்ளன. எனவே, நுவரெலியா மாவட்டத்துக்கு மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்புரிமை அவசியமற்றது. எனவே, இரத்தினபுரிக்குத் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுக்கவேண்டும்**

எனவே, நுவரெலியா மாவட்டத்துக்கு மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்புரிமை அவசியமற்றது எனக் கூறியுள்ள எஸ். ஆனந்தகுமார், அந்த நாடாளுமன்ற உறுப்புரிமையை சந்திரகுமாருக்கு வழங்க, கட்சியின் தலைமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

இரத்தினபுரிக்குத் தமிழ் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே தான் போராடுவதாகவும், அந்தச் சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளதாகவும் அவர் கூறுகின்றார். இந்தச் சந்தர்ப்பத்திலாவது, இரத்தினபுரி தமிழர்களின் நாடித் துடிப்பை அறிந்து, ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தை வழங்கும் பொறுப்பு தமிழ் முற்போக்குக் கூட்டணி வசம் உள்ளது என, ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட தமிழ் அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் மேலும் தெரிவித்துள்ளார்.

கிழக்கில்

# 3 மாவட்டங்களையும் 3 கட்சிகள் கைப்பற்றின

■ சகா

பொதுத்தேர்தல் முடிவுகளுக்கு அமைவாக, கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களையும் மூன்று வெவ்வேறு கட்சிகள் கைப்பற்றியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில், அம்பாறை மாவட்டத்தை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி கைப்பற்றியுள்ளதோடு மட்டக்களப்பு மாவட்டத்தைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வெற்றி கொண்டுள்ளது. திருமலை மாவட்டத்தை, ஐக்கிய மக்கள் சக்தி கைப்பற்றியுள்ளது.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 126,012 வாக்குகளைப்பெற்று மூன்று ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி 102,274 வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் 43,319 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் தேசிய காங்கிரஸ் 38,911 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில், இலங்கை தமிழ் அரசு கட்சி (தமிழ்த் தேசிய கூட்டமைப்பு) எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை.

திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் அம்பாறை, சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை ஆகிய தேர்தல் தொகுதிகளில் 5 இலட்சத்து 13ஆயிரத்து 979 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில் 402,344 பேர் வாக்களித்திருந்தனர்.

இதில் 385,997 வாக்குகள் செல்லுபடியான வாக்குகளாகப் பதிவானதோடு 16,347 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 79,460 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி 67,692 வாக்குகளைப் பெற்று 1 ஆசனத்தையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 34,428 வாக்குகளைப்பெற்று 01 ஆசனத்தையும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 33,424 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் பெற்றுக்கொண்டதோடு ஐக்கிய மக்கள் சக்தி 28,362 வாக்குகளைப் பெற்ற போதிலும் எவ்வித ஆசனங்களையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தி கட்சி 86,394 வாக்குகளைப் பெற்று 02 ஆசனத்தையும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 68,681 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 39,570 வாக்குகளைப்பெற்று 01 ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

# கூரிய ஆயுதத்தால் தாக்கி குடும்பஸ்தர் படுகொலை

■ ஏ.எம்.ஏ. பரீட்

கிண்ணியா பொலிஸ் பிரிவு, பூவரசந்தீவுப் பகுதியில், நேற்று முன்தினம் நள்ளிரவு (06), இளம் குடும்பஸ்தர் ஒருவர், கூரிய ஆயுதமொன்றால் தாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், இருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

26 வயது மதிக்கத்தக்க ஒரு பிள்ளையின் தந்தையான அப்துல் மனாப் ஷபான் என்பவரே, இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று, கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

அவரது வீட்டிலிருந்து நான்கு பேர், அவரை அழைத்துச் சென்றனர் என்றும் அதன் பின்னரே அவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் உறவினர்கள் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

உயிழந்தவரின் சடலம், தற்போது கிண்ணியா தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘வாக்காளர்களுக்கு நன்றி’

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்தில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு; 83,398 விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்ட ரவூப் ஹக்கீம், தமக்கு முதலிடத்தைப் பெறுவற்கு உதவிய வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.



அத்துடன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் மரச் சின்னத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், ஐக்கிய மக்கள் சக்தியில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும், புத்தளம் மாவட்டத்தில் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பின் தராசு சின்னத்திலும் போட்டியிட்டவர்களுக்கு வாக்களித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்த வாக்காளர்களுக்கும் அவர் நன்றிகளைத் தெரிவித்தார்.

மேலும், குருநாகல், வன்னி, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியினூடாகப் போட்டியிட்ட தமது கட்சி சார்பான வேட்பாளர்களை ஆதரித்தவர்களுக்கும் அவர் தமது நன்றிகள் உரித்தாகட்டும் என்றார்.

# ‘உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்’

■ எம்.எம்.அஹமட் அனாம்

“ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மீது பெரும்பான்மை மக்கள் நம்பிக்கை கொண்டு, அதிகப்படியான வாக்குகளை வழங்கியுள்ளதால் அமைக்கப்படும் அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு, முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்” என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில், மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரே நாடாளுமன்ற உறுப்பினரான ஹாபிஸ் நஸீர் அஹமட், நேற்று (07) பொதுமக்களால் வரவேற்கப்பட்டு, வாழ்த்தப்பட்டார்.

ஏறாவூர் ஜாமிஉல் அக்பர் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்ற இந்நிகழ்வில், பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.



இதன்போது கருத்துரைக்கையிலேயே, நஸீர் அஹமட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு, தேர்தல் காலத்தில் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி, மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியலுக்காகத் தலைவிரித்தாடிய இனவாதம், பிரதேசவாதம் ஆகியவற்றை எதிர்காலத்தில் தோற்கடிக்கச் செய்யும் வகையில், அனைத்து இனமக்களையும் அரவணைத்து ஆட்சி செய்யப்போவதாகவும் அவர் உறுதியளித்தார்.

# ‘பாதையை மாற்ற வேண்டும்’

■ வ. சக்தி

“மட்டக்களப்பு மக்கள் வித்தியாசமான ஒரு பாதையை விரும்புகின்றார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தற்போது சென்று கொண்டிருக்கின்ற பாதையில் மாற்றம் வேண்டும்” என, நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து வெற்றி பெற்றுள்ள கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், “எனது வெற்றியைத் தோற்கடிக்க வேண்டுமெனவும் நான் நாடாளுமன்றம் செல்லக்கூடாது என்பதற்காகவும், பலராலும் பல சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. நானும் என்னுடன் இருந்த அனைவரும் ஒன்றிணைந்து மிகவும் போராடித்தான் இந்த வெற்றியைப் பெற்றிருக்கின்றோம்.

“புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு, தமிழ் மக்கள் ஒரு தீர்வை வேண்டி நிற்கும் இந்த வேளையில், வித்தியாசமான முறையில் தமிழ் மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தவகையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப சிறந்ததொரு முடிவை எடுக்கவேண்டிய தேவை இருக்கின்றது.

“கட்சிக்காகவா மக்கள்;



> **கட்சிக்காகவா மக்கள்; மக்களுக்காகவா கட்சி என்ற ரீதியில், நாங்கள் மக்களின் விருப்பத்துக்கு ஏற்றாற்போல் செயற்பட வேண்டிய தேவை உள்ளது**

மக்களுக்காகவா கட்சி என்ற ரீதியில், நாங்கள் மக்களின் விருப்பத்துக்கு ஏற்றாற்போல் செயற்பட வேண்டிய தேவையும் இருக்கின்றது.

“அந்தவகையில், தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) மிகவிரைவில் கூடி ஒரு தீர்மானத்தை எடுத்து, அதைத் த.தே.கூவின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்து, அதற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவையில் நாங்கள் இருக்கின்றோம்.

“எதிர்காலத்தில் என்னைப் பொறுத்தவரையில், என்னில் மக்கள் நம்பிக்கை வைத்தும், நான் கடந்த காலங்களில் மக்களுக்குச் செய்த சேவையை வைத்தும்தான் மட்டக்களப்பு மக்கள் எனக்கு இம்முறை 26,382 வாக்குகளை அளித்திருக்கின்றார்கள்.

“அந்தவகையில், மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும், உள்ளூர் பிரதேச அபிவிருத்திக்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாதையைச் சீரமைப்பதற்கும் எனது பதவிக் காலத்தைப் பயன்படுத்த தயாராக இருக்கின்றேன்” என்றார்.

# ‘எனது வீட்டுக் கதவுகள் மக்களுக்காகத் திறந்திருக்கும்’

■ ஏ.எம்.ஏ. பரீட்

எதிர்காலத்தில் கட்சி, இன, மத பேதமற்று சேவைகள் செய்வேன் என்றும் மக்களுக்காக எனது வீட்டுக் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் என்றும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை மாவட்டக் காரியாலயத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, இவ்வாறு தெரிவித்தார்



அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், “திருகோணமலை மாவட்டம், இம்முறை, ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற முதல் மாவட்டமாகத் திகழ்கிறது. இம்மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக, நான் வெற்றிபெற்றுள்ளேன். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், அனைவரும் எனது சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

“எனது வெற்றிக்காகப் பாடுபட்ட அனைத்து மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்” என்றார்.

# ‘நாடாளுமன்றத்தில் முரசொலி கொட்டும்’

என்றுமே மக்களோடு மக்களாகவும் தன் தொப்புள்கொடி உறவுகளுக்குள் ஒருமித்தவனாகவும் வாழ்பவன் தான் எனத் தெரிவித்த பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், “அதன் பிரதிபலனே இன்று மக்களின் பிரதிநிதியாக பதுளை மண்ணில் மீண்டும் சரித்திரம் படைத்துள்ளேன்” என்றார்.

பதுளையில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், “தொலைபேசிச் சின்னத்துக்கும் தனக்கும் வாக்களித்த பதுளை வாழ் மூவின மக்களுக்கும் இரு கரம் கூப்பிய, மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். பதுளை மாவட்டம், மூவின மக்களும் செறிந்து வாழும் பகுதியாகும். ஆகவே, முஸ்லிம் மக்களுக்கு என்றும் நான் ஒரு காவலன்; சிங்கள மக்கள் என் சகோதரர்கள். எனவே, அனைத்து மக்களையும் ஒன்றினைத்ததாக என்னுடைய அரசியல் பயணம் தொடரும்” என்றார்.



# ‘புதிய மலையகத்தை உருவாக்குவேன்’

■ எஸ். கணேசன்

“புதிய மலையகத்தை உருவாக்குவேன் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே மக்கள் எனக்கு பேராதரவை வழங்கியுள்ளனர். எனவே, மக்களின் எதிர்பார்ப்பை நிச்சயம் நிறைவேற்றுவேன்” எனத் தெரிவித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தனக்குக் கிடைத்த வெற்றியை மக்களுக்காகச் சமர்ப்பிக்கின்றேன் என்றார்.

பொதுத் தேர்தல் வெற்றியின் பின்னர், கொட்டகலையில் வைத்து நேற்று (07) ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, “நுவரெலியா மாவட்டத்தையும் கைப்பற்றி வெற்றிபெறவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருந்தது. தந்தையும் இதனையே கூறியிருந்தார். அந்தவகையில், மாவட்டத்தைக் கைப்பற்றி விருப்பு வாக்குப் பட்டியலில் முதலிடம் பிடித்தது மகிழ்ச்சியளிக்கின்றது.

“இந்தப் பெரும் வெற்றியைக் கண்டு மகிழ்வதற்கு எனது தந்தை அருகில் இல்லாமை பெரும் கவலையளிக்கின்றது. ஆனால், எனது தந்தையை நேசித்த மக்கள் என்னுடன் இருக்கின்றார்கள். அது போதும்.

“நான் முதன் முதலில் நாடாளுமன்றம் செல்கின்றேன். மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அதனை முன்னிலைப்படுத்தியே பிரசாரமும் செய்தேன். நுவரெலியா மாவட்ட மக்கள் மட்டுமல்ல வெளிமாவட்ட இளைஞர்களும் எமக்குப் பேராதரவை வழங்கினர்.

“இதனால்தான் கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களில் ஆசனங்களைப் பெறமுடியாவிட்டாலும் எமக்கான வாக்கு வங்கி அதிகரித்துள்ளது. கொள்கை அடிப்படையிலேயே, எமது அரசியல் பயணம் தொடர்கின்றது. கட்சி, தொழிற்சங்க பேதங்களுக்கு இடமில்லை. வெற்றியின் பங்காளிகளாக எமது மக்களும் மாறியுள்ளனர். எனவே, மாற்றத்தை நோக்கிப் பயணிப்போம்” என்றார்.



# ‘என்றுமே அசைக்க முடியாத கூட்டணி’

■ டி. ஷங்கீதன்

என்றுமே அசைக்க முடியாத கூட்டணி தமிழ் முற்போக்கு கூட்டணி என்பதை மீண்டும் ஒரு முறை மக்கள் நிரூபித்திருக்கின்றார்கள். எங்களுடைய சேவைகளை மக்கள் அங்கிகரித்து வாக்களித்திருக்கின்றார்கள்” எனக் கூறிய மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தேர்தல் வெற்றியின் பின்பு, நேற்று (07) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், “இந்தத் தேர்தல் மிகவும் சவாலான ஒரு தேர்தலாக இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு, தேர்தலை சந்திப்பது என்பது மிகவும் சவாலான ஒரு விடயம். அதிலும் வெற்றி பெறுவது என்பது, இன்னும் கடினமானதொரு விடயம்.

“ஆனாலும், எங்களுடைய மக்கள் மிகவும் தெளிவாகச் சிந்தித்து வாக்களித்திருக்கின்றார்கள். எங்களுடைய மக்களின் நம்பிக்கைக்கு உரியவர்கள், நாங்கள் என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

“தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பாக, மீண்டும் ஆறு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை, எங்களுடைய கூட்டணியின் பலம் என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

“நாங்கள் எத்தனை விருப்பு வாக்குகள் பெற்றுக் கொண்டோம் என்பதைவிட, எத்தனை உறுப்பினர்களை எங்களுடைய சமூகம் சார்பாக, நாடாளுமன்றத்துக்கு அழைத்துச் செல்கின்றோம் என்பதே மிகவும் முக்கியமாகும்.

“அந்த வகையில், நாங்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டதன் காரணமாக, எங்களுடைய அனைத்து உறுப்பினர்களும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். எனவே, ஒற்றுமையாகச் செயற்படுவதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்” என்றார்.



# ‘தூய்மையான கலாசாரத்துக்கு மக்கள் ஆணையிட்டுள்ளனர்’

■ பி.எம்.எம்.ஏ. காதர்

“ஊழலுக்கு எதிரான தூய்மையான ஓர் அரசியல் கலாசாரத்தை உருவாக்க மக்கள் ஆணை வழங்கி இருக்கின்றார்கள். இந்த ஆணையின் மூலம், தூய்மையான அரசியல் கலாசாரத்தையும் ஊழலுக்கு எதிரான நேர்மையீனத்துக்கு எதிரான புதியதோர் அரசியல் கலாசாரத்தை உருவாக்குவோம்” என, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி முஷாரப் முதுநபீன் தெரிவித்தார்.

வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நேற்று (07) ஏற்பாடு செய்யப்பட்ட



கூட்டத்தில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தாவது, “மக்களின் ஆதரவைகொண்டு, தேர்தலை நடத்தலாம். அதில் வெற்றியும் பெறலாம் என்பதை நிரூபணம் செய்யும் வகையிலான ஒரு முறைமையை நாம் கடைப்பிடித்தோம். அது வெற்றியளித்திருக்கின்றது.

“நாம் வெற்றி பெறுவதற்காக உழைத்த, வாக்களித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

“திகாமடுல்ல மாவட்டத்திலுள்ள ஒவ்வோர் ஊர்களிலும் சேவையாற்ற இருக்கின்றேன். இறக்காமம் பிரதேசத்தில் உள்ள மக்கள் எனது வெற்றியின் பங்காளிகளாக இருந்திருக்கின்றார்கள். இந்தப் பிரதேசம் வளர்ச்சிகாண வேண்டியது என்பதை நன்கு அறிவேன்” என்றார்.

# ‘தலைவரை நம்பிய மக்களுக்கு நன்றி’

■ எம்.எஸ்.எம். நூர்தீன்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மீதும் அதன் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதும் நம்பிக்கை வைத்த வாக்களித்த மக்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதாக, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பி.பிரசாந்தன் தெரிவித்தார்.



தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வெற்றி குறித்து, நேற்று (07) கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், “எமது கட்சியின் தலைவர், மட்டக்களப்பு சிறைச்சாலையில் நான்கரை வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற போதும், எம் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த அனைத்து மட்டக்களப்பு மாவட்ட வாக்காளர்களுக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்” என்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 8 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.